**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 165** **நாள் : 30.09.2024**

**துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.6.06 கோடி மதிப்பிலான சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், பல்நோக்குக் கட்டடம், நவீன பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பல்வேறு தெருக்களுக்கு பெயர்ப்பலகைகள் பொருத்துதல் உள்ளிட்ட புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பேரக்ஸ் தெருவில் இன்று (30.09.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.6.06 கோடி மதிப்பிலான சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ், பல்நோக்குக் கட்டடம், நவீன பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பல்வேறு தெருக்களுக்கு பெயர்ப்பலகைகள் பொருத்துதல் உள்ளிட்ட புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ், வார்டு-54, அம்மன் கோயில் தெருவில் ரூ.40 இலட்சம் மதிப்பில் பல்நோக்குக் கட்டடம், வார்டு-55க்குட்பட்ட பல்வேறு தெருக்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பில் பெயர்ப்பலகைகள் பொருத்துதல், வார்டு-56க்குட்பட்ட இப்ராஹிம் சாலை, பிரகாசம் சாலை-டான்பாஸ்கோ பள்ளி அருகில் மற்றும் என்3 காவல் நிலையம் அருகில் ரூ.39.99 இலட்சம் மதிப்பில் 3 நவீன பேருந்து நிறுத்தங்கள், வார்டு-57க்குட்பட்ட பல்வேறு தெருக்களுக்கு ரூ.35 இலட்சம் மதிப்பில் பெயர்ப்பலகைகள் பொருத்துதல், வார்டு-60க்குட்பட்ட பல்வேறு தெருக்களுக்கு ரூ.32 இலட்சம் மதிப்பில் பெயர்ப்பலகைகள் பொருத்துதல் என ரூ.166.99 இலட்சம் மதிப்பிலான 9 புதிய திட்டப்பணிகள்,

வார்டு-55க்குட்பட்ட பேரக்ஸ் சாலை, முதல் லேன் பகுதி மற்றும் போர்த்துகீஸ் தேவாலயத் தெரு மற்றும் வார்டு-60க்குட்பட்ட ராஜாஜி சாலை ஆகிய இடங்களில் ரூ.218.20 இலட்சம் மதிப்பில் 3 புதிய மழைநீர் வடிகால் பணிகள்,

வார்டு-54க்குட்பட்ட பகுதிகளில் 11 எண்ணிக்கையில் ரூ.102.21 இலட்சம் மதிப்பில் சிமெண்ட் கான்கிரீட் சாலைப் பணிகள், வார்டு-55க்குட்பட்ட பகுதிகளில் 4 எண்ணிக்கையில்

ரூ.33.17 இலட்சம் மதிப்பில் கான்கிரீட் சாலைப் பணிகள், வார்டு-56க்குட்பட்ட பகுதிகளில் 14 எண்ணிக்கையில் ரூ.23.75 இலட்சம் மதிப்பில் சிமெண்ட் கான்கிரீட் சாலைப் பணிகள், வார்டு-57க்குட்பட்ட பகுதியில் ரூ.10.31 இலட்சம் மதிப்பில் தார் சாலைப் பணி, வார்டு-59க்குட்பட்ட பகுதிகளில் ரூ.51.13 இலட்சம் மதிப்பில் 4 எண்ணிக்கையில் சிமெண்ட் கான்கிரீட் சாலைப் பணிகள் மற்றும் 2 எண்ணிக்கையில் தார் சாலைப் பணிகள் என ரூ.220.57 இலட்சம் மதிப்பில் 26 எண்ணிக்கையிலான புதிய சாலைப் பணிகள் என மொத்தம் ரூ.605.76 இலட்சம் மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திரு.ல.நவீன், திரு.வெ.பரிமளம், திரு.ராஜேஷ் ஜெயின், திரு.இசட். ஆசாத், மண்டல அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**